

# பயணம்

இதழ்- 4

அக்டோ-2016

***ஸ்ரீ அண்ணன் சுவாமிகளிடம் சமர்ப்பிக்கப்படுகிறது--இறை நாட்டம் கொண்ட அன்பர்களுக்காக.....**

www.sriannanswamigal.com

www.sriannanswamigalmobile.in

இறைவனை நாடுபவர்கள்,பெரும்பாலும் தனது ஆரம்ப நாட்களில் பல குழப்பங்களுக்கு ஆளாகின்றனர். தூசி படிந்த அறையை சுத்தம் செய்ய முற்படும்போது பெரும் புழுதி கிளம்பி முன்பிருந்த வெளிச்சத்தையும் மறைப்பது போல ,ஆத்ம சாதகனுக்கு தற்காலிக இருளும், மயக்கமும் ஏற்படுகிறது. அப்போதெல்லாம் அவனுக்கு துணை, குருவின் அரவணைப்பு மட்டுமே. குருவருளும், இறையருளும் யாருக்கு கிடைக்கின்றதோ..அவர் பேறு பெற்றவர். அவ்வாறு அருள் கிடைக்க ஒரு சாதகன் தன்னை தயார் படுத்திக்கொள்வது மிகவும் அவசியம். இறைவனே எல்லாம் செய்வான் எனக்கு, என தமோ குண தாக்கத்தில் ஒருவன் உறங்கிகொண்டிருந்தால்,மேலும் மயக்கத்தில் ஆழ்ந்து போவான்.எனவே தேடலின் தீவிரம், சரணாகதியின் அவசியம்,இறைவன் நம்மை ஆட்கொள்ளும் விதம்,குருவின் அவசியம், குருவின் மகிமை, குருவின் அருள் இவற்றை பற்றி நன்றாக உணர்ந்து தெளிந்த மஹாத்மாக்களின் அனுபவங்களை இங்கு நாம் தருகிறோம்.இவை ஆத்ம சாதகர்களுக்கு, இறைஞான தரிசனம் என்ற பயணத்தில் ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

-இணைய நிர்வாகிகள்

# உள்ளே


| படைப்புக்கள் | பக்கம் எண் |
|---|---|
| அன்னையின் அம்சங்கள் | 04-08 |
| கேள்வி-பதில்கள் | 09-13 |

# அன்னையின் அம்சங்கள்



( யோகி ஸ்ரீ அரவிந்தர் எழுதிய Mother என்ற புத்தகத்தின் தமிழாக்க நூலான அன்னை என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை தான் இவை. ஆத்ம சாதகனுக்கு மிகவும் பயனுள்ளவையாக இருக்கும் இவை.---- இணைய நிர்வாகிகள் )

உலகை இயக்கும் பராசக்தியின் வெளிப்பாடு நான்கு வகையாக உள்ளன.அவைகள்:

1. ராஜராஜேஸ்வரியான மகேஸ்வரி
2. மஹா காளி
3. மஹா லெக்ஷ்மி
4. மஹா சரஸ்வதி

*சென்ற இதழில் ராஜராஜேஸ்வரியான மகேஸ்வரி, மகாகாளி மற்றும் மகாலட்சுமி இவர்களின் அம்சங்களை விரிவாக பார்த்தோம். இந்த இதழில் மகாசரஸ்வதியின் அம்சங்களை பார்ப்போம்...*

மகாசரஸ்வதி, அன்னையின் செயல் சக்தி ஆவாள். அவள் பூரணம், ஒழுங்கு இவற்றின் அதிதேவதை ஆவாள். நால்வருள் இளையவள் ஆகிய இவள் காரியங்களை நிறைவேற்றுவதில் கைதேர்ந்தவள். சட இயல்பிற்கு மிக அருகில் உள்ளவள் இவள்.

மகேஸ்வரி, உலக சக்திகளில் அகண்ட வழிகளை வகுக்கிறாள். மகாகாளி, அவற்றின் ஆற்றல்களையும் உத்வேகத்தையும் உந்தி செலுத்துகிறாள். மகாலெக்ஷ்மி, அவற்றின் சந்தங்களையும் அளவுகளையும் கண்டுபிடிக்கிறாள். மகாசரஸ்வதி அவற்றின் நிர்வாக நுட்பம், நடைமுறை விபரம், பாகங்களுக்கு இடையேயான உறவு, சக்திகளை திறம்பட இணைத்தல்,விளைவிலும் நிறைவேற்றத்திலும் பிழைபடாத திட்பம் இவற்றிற்கு தலைமை தாங்குகிறாள். பொருள்களை பற்றிய இயலறிவு, கலையறிவு, தொழில்நுட்ப அறிவு இவையெல்லாம் மகாசரஸ்வதியின் இராஜ்ஜியம் ஆகும்.கைதேர்ந்த கலைஞனின் நுட்பமான அறிவு, நேர்த்தி, பொறுமை, அவனது உள்ளொளி பெற்ற

மனது,அவனது உணர்வுடன் வேலை செய்யும் கைகள்,அவனது ஊடுருவி காணும் பார்வைகள், இவற்றின் நூலிழையும் பிசகா திறமை இத்துணையும் தன் இயல்பில் கொண்டவள்.தான் தேர்ந்தெடுத்தவர்களுக்கு இவற்றை கொடுக்க வல்லவள். வலிமையுடன், சலியாது, கவனத்துடன், திறம்பட வேலைசெய்து, உலகங்களை அமைத்து ஒழுங்குபடுத்தி நிர்வகிப்பவள் இவளே; உலகங்களின் கைவினைஞன், தொழில் நிபுணன்,பாகுபாடு செய்வோன் எல்லாம் இவளே. நம்மை உருமாற்றி நமது இயல்பிற்கு புத்துருவம் அளிக்க முனையும்போது இவளுடைய வேலை சிரமமானது, நுட்பமானது.நமது அவசரபுத்திக்கு அது மிக மெதுவாக நடப்பதாகவும் முடிவுறாது போலவும் தோன்றலாம். ஆனால் இவள் வேலை அயர்வற்றது, பழுதற்றது, பூரணமானது. ஏனெனில் இவளது செயல்களில் உள்ள சங்கற்பம் தீவிர நேர்மை கொண்டது,விழிப்புடன் இருப்பது,சோர்வற்றது.

இவள் நம்மீது பரிந்து, சிறு பிசகையும், விட்டுப்போனதையும், கோணலையும், அரைகுறைகளையும் கண்டுபிடித்து, தொட்டுச் சீராக்குகிறாள். எதையும் சிறிதென்றோ அற்பமென்றோ இவள் அசட்டையாக விடுவதில்லை. எவ்வளவுதான் கண்ணிற்க்கு எட்டாமல், மாறுவேடம் பூண்டு புதைந்து மறைந்து இருந்தாலும் இவள் பார்வையிலிருந்து

எதுவும் தப்பமுடியாது.. ஒவ்வொரு பாகமும் அதற்குறிய உண்மையான வடிவைப் பெற்று,மொத்த அமைப்பில் அதற்குறிய இடத்தில்பொருந்தி,அதற்கு குறிப்பிடப்பட்ட நோக்கத்தை திட்டவட்டமாக நிறைவேற்றும் வரை மீண்டும் மீண்டும் அதை வார்த்தெடுக்கிறாள். எதை தேர்வது, எதை தள்ளுவது என்பதை இவளின் அக ஞானம் ஒரே சமயத்தில் கவனித்து அவற்றை அடையும் வழிகளையும் காண்கிறது. சரியான கருவி, சரியான காலம், சரியான சந்தர்ப்பங்கள், சரியான வழிமுறைகள் ஆகியவற்றை வெற்றிகரமாக தீர்மானிக்கிறது.

கவனமின்மை, அசட்டை, பதற்றம், அலங்கோலம், தாறுமாறு, அலட்சியம்,ஈடுபாடின்மை, குறிதவறல், கருவிகளையும் திறமைகளையும் தவறாக பயன்படுத்தல், செய்யவேண்டியதை செய்யாமல் விடுத்தல் அல்லது பாதியில் விடுதல் இவையெல்லாம் இவள் இயல்பிற்கு புறம்பானவை, இவளுக்கு பிடிக்காதவை. இவள் வேலை முடிவுறும்போது எதுவும் மறக்கப்பட்டிராது. எப்பகுதியும் விடப்பட்டோ, இடம் தவறியோ, பழுதான நிலையிலோ இராது. எல்லாம் திடமாயும், சரியாயும், பூரணமாயும் ,வியக்கத்தக்கதாயும் இருக்கும். பரம பரிபூரணத்திற்கு குறைந்த எதுவும் இவளுக்கு திருப்தி அளிக்காது.தன் படைப்பின் முழு நிறைவிற்கு அனந்த காலமும்

வேலை செய்ய வேண்டும் என்றாலும் இவள் அதற்கு ஆயத்தமாக இருக்கின்றாள்.

ஆதலால் அன்னையின் சக்திகள் அனைவருள்ளும் இவளே மனிதருடனும்,அவனது ஆயிரம் குறைகளுடனும் நீண்டநாள் பாடுபடுகின்றவள். நாம் நமது லட்சிய உறுதியில் ஒருமுகப்பட்டவர்களாய், கபடமற்றவர்களாய், நேர்மையுள்ளவர்களாய் இருப்பின் இவள் புன்னகை பொலிய, நெருங்கித் துணை நின்று-எளிதில் விலகிச் சென்றுவிடாமல், சோர்ந்துவிடாமல், தோல்விமேல் தோல்வி ஏற்படினும் பிடிவாதமாக நின்று-ஒவ்வொரு அடியிலும் நம்மைத் தன் திருக்கரங்களில் தாங்குகிறாள். நமது தேவைகளை அளிப்பதில் தாயாய்,நமது கஷ்டங்களில் நண்பனாய் இவள் இருக்கின்றாள்.

அன்னையின் மற்ற சக்திகளின் வேலையெல்லாம் தங்கள் நிறைவிற்கு இவளையே சார்ந்து இருக்கின்றன. ஏனெனில் மகாசரஸ்வதியாகிய இவளே சட அஸ்திவாரத்தை வலுவாக்கி, சிறு அம்சங்களையும் விவரமாக திட்டமிட்டு, கட்டடத்தின் அரணை எழுப்பி, அதை உறுதிபடுத்துகிறாள். உயர் இயற்கையின் முழுமையை நோக்கி நம்மை உந்தி தள்ளுவதில் இவள் விடாமுயர்ச்சியுடனும் அமைதியுடனும் இருக்கின்றாள்.

# கேள்வி.. பதில்கள்..

## சுவாமி சிவானந்தரின் நூலிலிருந்து.(...தொடர்ச்சி)



- எது உலகிலேயே அரிய பொருள்?
- பற்றின்மை.

- யார் வலிமையான மனிதன்?
- யாரொருவன் அஹிம்சையை கடைபிடிக்கிறானோ, மற்றும் மற்றவர்களின் அவமதிப்புகளை புன்முறுவலுடன் ஏற்றுக்கொள்கிறானோ அவன்.

- யார் அழகானவன்?
- யோகி

- யார் அசிங்கமானவன்?
- பேராசை பிடித்தவன்.

- யார் பிச்சைக்காரன்?
- ஆசையுள்ளவன்.

- எது நம்மை மிகவும் தூண்டுவது?
- ஆணுக்கு பெண்ணும்;பெண்ணுக்கு ஆணும்.

- எது இயந்திரத்திலேயே மிகவும் அற்புதமானது?
- மனம்.

- யார் குடிகாரன்?
- பணத்திலும்,ஏட்டுக்கல்வியிலும் மயங்கி கிடப்பவன்.

- நான் தியானத்தில் அமரும் பொழுதே,பல எண்ணங்கள் என் மனதில் எழுகின்றன.அவற்றை எப்படி தடுப்பது? அவற்றை அடக்கமுடியவில்லையே?
- எண்ணங்களை பலவந்தமாக அடக்க முயலக்கூடாது.அவ்வாறு செய்தால் அவை இரட்டை சக்தியுடன் மறுபடியும் மேலே வரும்.ஆனால் அமைதியான சாட்சி மாத்திரமாய் இருந்து'இவற்றுடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லை'என பாராமுகமாய் இருந்தால் எல்லா உலக சிந்தனைகளும்,எண்ணங்களும் தானாகவே கொஞ்சம் கொஞ்சமாக இறக்கும்.

- தீய கனவுகள் வராமல் இருக்க என்ன செய்யவேண்டும்?
- ஆன்மீக புத்தகங்களை படித்துவிட்டு,அரைமணி நேரமாவது தியானம் செய்துவிட்டு பின்பு படுக்க செல்லவேண்டும்.

- அகங்காரம் இல்லா மனிதன் எவ்வாறு இருப்பான்?
- அவன் தன்னை தன் உடலோடு சம்பந்தப்படுத்தி பார்க்கமாட்டான்.அவன் பெருமை,விருப்பு,வெருப்பு, பொறாமை,கோபம், ஏமாற்றுத்தனம் இவற்றிலிருந்து விடுபட்டவனாக இருப்பான்.

- இறைவன் இவ்வுலகை ஏன் படைத்தான்?
- இறை தரிசனம் அல்லது ஆத்ம தரிசனம் கிடைத்த பிறகே இந்த கேள்விக்கு உனக்கு பதில் புரியும். காலம்,தேசம்,காரண காரியம் இவற்றில் கட்டுப்பட்டிருக்கும் மனதிற்கு இவற்றையெல்லாம் கடந்த ஒரு விஷயம் எப்படி புரியும்? அல்லது எப்படி புரிய வைக்க முடியும்?

- ஆன்மனேய ஒருமைப்பாட்டு வாழ்க்கையை எப்படி வாழ்வது?

- எல்லா உயிர்களுக்கும் சேவை செய்தல்,தான தர்மம் செய்தல், நம்மிடத்தில் உள்ள செல்வங்களை மற்றவரோடு பகிர்ந்து வாழுதல்,உலகளாவிய அன்பு,ஒரே இறைவன்தான் எல்லோர் இதயத்திலும் குடிகொண்டுள்ளான் என்ற தரிசனம்,இடைவிடாத ஆத்ம தியானம் இவைகளே ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் வாழ தேவைப்படுவன.

***********
********
*****




*இதழ் முற்றும்*